செ.வெ.எண்: 120 நாள்: 26.02.2018

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடை துறையின் மூலம் 01.03.2018 முதல் 23.03.2018 வரை அனைத்து மாட்டினங்களுக்கும் இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் - விவசாயிகள் பொதுமக்கள் தங்களது மாட்டினங்களுக்கு அவசியம் தடுப்பூசி போட வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப,அவர்கள் தகவல்

---

கோமாரி நோய் இரட்டை குளம்பின கால்நடைகளை தாக்கி, கொப்புளங்கள் ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோய் ஆகும். இந்நோய், வாயிலும், குளம்புகளுக்கு இடையிலும் கொப்புளங்களை உண்டாக்கி அவை உடைந்து காயங்களை உண்டாக்கும்.

பண்ணையில் சுகாதாரமற்ற பராமரிப்பு முறைகள் கடைபிடிக்கப்படுவதாலும், சுற்றுப்புற சூழல் துப்புரவு அற்றதாக இருப்பதாலும், கால்நடைகளுக்கு இடையே இந்நோய் எளிதில் பரவுகிறது. நோயுற்ற கால்நடைகளின் உமிழ் நீர் மற்றும் சிறுநீர், பால் முதலியன மூலமும், பண்ணைக் கழிவுகள் மூலமும் பரவுகிறது.

பால் உற்பத்தி குறைவு, இனவிருத்தி பாதிப்பு, கால்நடைகளின் தோல் மற்றும் தோல் பொருட்களின் மதிப்பு இறக்கம், எருதுகளில் வேலைத்திறன் குறைதல் மற்றும் கன்றுகளின் அதிகளவு இறப்பு ஆகியன ஏற்பட்டு கால்நடை வளர்ப்போர்க்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது.

இந்நோயினைத் தடுக்கும் பொருட்டு "கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் " கீழ் மாநிலத்திலுள்ள அனைத்து மாட்டினம் மற்றும் எருமை இனங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில், **3.49** இலட்சம் மாட்டினம் மற்றும் எருமை இனங்களுக்கு சிறப்பு தடுப்பூசி குழுக்கள் மூலம் இந்நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மந்தையின் நோய் எதிர்ப்பு திறன் அதிகளவில் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, **21** நாட்களில் அனைத்து மாட்டினம் மற்றும் எருமை இனங்களுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படும்.

நோயுற்ற கால்நடைகள், மூன்று மாதம் வயது நிரம்பாத கன்றுகள் மற்றும் கன்று ஈனும் தருவாயில் உள்ள மாட்டினம் மற்றும் எருமை இனம் தவிர மற்றும் அனைத்து மாட்டினங்களுக்கும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகிறது.

**தடுப்பூசிப்பணி 1.3.2018 முதல் 21.3.2018**

தற்போது 14–வது சுழற்சி தடுப்பூசி பணி அனைத்து மாவட்டங்களிலும் வரும் 1.3.2018 முதல் அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி மேற்கொள்ளப்படும். பத்திரிக்கை செய்திகள், துண்டு பிரசுரங்கள், ஒலிபெருக்கி மூலம் செய்திகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி ஆகியன மூலம் தடுப்பூசி பணி குறித்த செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் கடந்த 23.02.2018 அன்று நடைபெற்ற "கிராம சபை" கூட்டங்களின் வாயிலாகவும் இத்திட்டம் குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், கிராமங்களில் உள்ள அனைத்து மாட்டினங்களுக்கும் தடுப்பூசி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு தடுப்பூசி மேற்கொள்ளப்படும் நாளுக்கு முதல் நாள் தடுப்பூசி பணி குறித்து அறிவிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள கால்நடை மருந்தகம் / கால்நடை மருத்துவமனை / கால்நடை பெரு மருத்துவமனை / கால்நடை பன்முக மருத்துவமனை / உதவி இயக்குநர் அலுவலகம் / துணை இயக்குநர் அலுவலகம் / இணை இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றை அணுகவும்.

விவசாய பெருமக்கள் அனைவரும் தங்களது மாட்டினங்களுக்கு இத்திட்டத்தை பயன்படுத்தி இலவசமாக தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்டுகிறார்கள். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி